519

Registered No. M. 1761.

HEALTH AND INFANT WELFARE

An Anglo-Tamil Monthly

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்

ஒரு ஆங்கில தமிழ் மாதப்பத்திரிகை

Editor: Dr. Mrs. Anna Thomas   பத்திராதிபர்: டாக்டர் அன்னாதாமஸ் அம்மாள்

Vol. I   AUGUST—1923   No. 5

CONTENTS

No.	Title	Page.
1.	HEALTH OF THE BODY AND THE MIND	97
2.	REVIEWS	99
3.	HYGIENE AND MORAL EDUCATION by E. B. TURNER F. R. C. S.,	101
4.	EXCHANGES	103
5.	பிள்ளை பாதுகாக்கும் முறை	104
6.	பத்திராதிபர் குறிப்புகள்	106
7.	மேலான ஆரோக்கிய விதிகள்	109
8.	காலறாவைத் தடுப்பதற்கான விதிகள்	111
9.	தமிழ் மருந்து	112
10.	பெற்றோர் கடமை	114
11.	உபவாசம்	117
12.	மதிப்புரை	118
13.	பலவகை குறிப்புகள்	119

2 4 OCT 1923
MADRAS

All Rights Reserved.

Subscription Rs. 3 per annum for Inland. Single copy 6 As

சந்தா வருஷம் 1-க்கு ரூ. 3; பிரதி 1-க்கு அணா 6

T. S. GANESA & Co.,
TINNEVELLY TOWN.

Fixed Price! Our motto is small profit & quick return. Fresh Stock!!

Wholesale & retail dealers
in English & Ayurvedic medicines, Fancy articles, oilmanstores, stationery, Photo materials, Fountain pens watches and general goods.

P. K. Swaminatha Pillai,
Manager

T. Sankaralingam Pillai,
Proprietor.

The Tinnevelly District Co-operative Banking Union, Ltd.

(Registered under India Act II of India)

The Government have authorised the Investment in this Bank of Local and Municipal Funds.

Fixed Deposits at favourable rates.
Current Deposits at 3 p. c. per annum on daily balances
Savings Deposits at 6 p. c. per annum on daily balances.
Recurring Deposits

For further particulars please apply to:

T. S. Kanthimathinatha Pillai
J. S. Gunaratnam Pillai
Secretaries & Treasurers.

SHUNMUGAM & Co.,
Head Office, Palamcottah.

Dealers in Arms,& Ammunitions, Chemists, Druggists, & General Merchants,

Branches :—

P. S. SUNDARAM & Co., General Merchants, South Car Street, Tinnevelly Town.

SHUNMUGAM & Co., Wine & General Merchants, Tenkasi.

SHUNMUGAM & Co., General Merchants, Trichendur.

Cheapest houses for Patent Medicines & Drugs Prescriptions are dispensed carefully by qualified compounder.

P. K. SANKARAN PILLAI,
Proprietor & Municipal Councillor, Palamcottah.

Advertisement Rates

	One month	3 ms.	6 ms	12 ms.
For full page	Rs. 25	Rs. 70	Rs. 120	Rs. 220
„ half page	„ 15	„ 40	„ 70	„ 130
„ quarter page	„ 8	„ 20	„ 40	„ 80

Special rates will be allowed for long—standing advertisements for which please refer to the Manager.

I am sure "Health and Infant Welfare" will be widely read and appreciated by all those interested in child welfare work and spread much useful knowledge amongst the mothers of this Presidency. I wish this magazine all success.

Marie Willingdon

March 1923

"ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்' என்ற பத்திரிகை பலாரலும் வாசிக்கப்படுமென்றும்' பிள்ளைகளின் முன்னேற்றத்தைக் கருதுவோர்களால் நன்கு மதிக்கப்படுமென்றும், இந்த ராஜதானியிலுள்ள தாய்மார்களுக்குள் சிறந்த பயன் தரத்தக்க அறிவைப் பரவச்செய்யுமென்றும் நான் திட்டமாய்ச் சொல்லக்கூடும். இந்தப் பத்திரிகை எல்லா நலமும் பெறவேண்டுமென்று விரும்புகிறேன்.

மார்ச்சு௴ 1923 — மேரி வில்லிங்டன.

24 OCT 1923
MADRAS



2 4 OCT 1923
MADRAS

HEALTH AND INFANT WELFARE

VOL. I AUGUST, 1923 No. 5

HEALTH OF THE BODY AND THE MIND

Physical vigour is the basis of mental power. It is only the better nourished brain that achieves most, The brain cannot give out anything which is not passed up to it from the blood and the purity of the blood depends not only upon the right kind of food but upon right life habits, upon pure air, sun light, lots of healthful recreation, plenty of play, harmony of life, upon joy and gladness. The Napolinic maxim "an army moves on its stomach" is as true of the individual as it is of an army, The credit which the brain gets really belongs to the stomach. The brain cannot accomplish anything without the harmonius cooperation of the body.

All work and no play makes jack a dull boy. Many of our students and business men such as shopkeepers, lawyers and offi cers give very little attention to the health of their bodies. These cadaverous devitalized people sap their bodies to feed their brains. They give plenty of work for their brains and neglect their bodies and forget the great truth that without the harmonious cooperation of their bodies their brains cannot accomplish much in the long run. They do not eat the right kind of food at proper and regular intervals. They have hardly any rest They keep awake till very late in the nights and consequently do not sleep enough. Such students graduate with honors and such businessmen earn sometimes lakhs, at much physical sacrifice which lowers their future health and possibilities or success in life by seventy five per cent. Whatever lessens

physical strength or injures the health of the body sooner or later enfeebles the mind and makes for inefficiency. " No one can do the best of which he is capable unless he feels fit and the kind and quality of his food, his manner of partaking of it, his habits, regularity of exercise, of recreation, of sleep, his mental habits, all these things have a tremendous influence upon his health " says Dr. Marden.

Many people who are gifted with first class brains are turning out only second class work, because they are not backed up by good health. Physical weaklings can never make good leaders or good executives. Nature has no use for weaklings. " The survival of the fittest " is her law. Nature seldom presents her bill on the day you violate her laws, but if you overdraw your account at her bank you will be a physical bankrupt. If you give a mortgage on her body, be sure she will foreclose. Like Shylock she will demand the last ounce of flesh.

People who have neglected the health of their bodies, run up to a doctor with plenty of money when they find that they cannot use their brains any longer—They expect to get back their lost health by drinking some medicine for a few days. Are doctors magicians to give them a life elixir and cure them of all their ills in two days? The lost health can never be regained but by regularity of diet and excercise.

Few people back their brain with the right food—materials which make pure blood, build up a vigorous body and nourish a strong brain. They never eat regularly—and generally eat too much or too little. They take practically no exercise and some of them look upon games as a waste of time—After 5 P. M. daily students at their desks, vakils in their offices busy with their files and shop keepers engaged with their account books, and some Indian officers at their tables, is a common sight in our country—

People give continuous work to their minds, neglecting the health of their bodies and consequently the mind becomes unhealthy and fails them and generally they find it too late to remedy the evil—

An even balance between the health of the body and health of the mind must be maintained by right food at regular intervals, regular excercise, recreation and rest. The science of hygeinics demands holidays and rest also as necessary and indispensable for the health of the body and mind.

REVIEWS

We have great pleasure in acknowledging rceipt of "THE HEALTH" a monthly illustrated journal ably edited by Dr. W RamaRau M L C. We have been very carefully following the journal from its first issue. Every issue of it eontains very instructive and useful topics on health— Many of its articles are neatly Illustrated—we hope the english knowing public will patronise this journal and we heartily wish Dr. Rama Rau whose public spiritedness is so well known, every success in this enterprise.

The annual subscription of this journal is only Re. 1—8—0 and copies may be had from 323. THAMBU CHETTY ST. MADRAS E.

* * *

THE "PRINCELY INDIA" (*weekly*) DELHI. Annual Subscription Rs 6/- This is a very interesting weekly paper we are receiving in exchange. Every issue of it contains very well written articles especially about the administration of the Native States. in India. 'Historical Sketches published in a series by Mr. Ramachandra Rai M. A., affords very profitable and interesting reading. We wish our contemporary every success.

* * *

THE "GUARDIAN" (*weekly*) CALCUTTA. Rs. 6 per annum The 'GUARDIAN' is a christian weekly paper published from Calcutta. Though it is styled a christian weekly, we are glad to note that the articles, published in it are written by learned men of catholic and broad views on religious and social questions. We congratulate our contemporary for justifying its name and motto in every issue of it and wish it a very useful career.

"ADVERTISING INDIA" (*Fortnightly*) MADRAS.
Rs 6/- per annum. This journal published by Mr. Kanniappu B. A., contains very interesting articles on commercial, industrial and scentific subjects. Our country men have yet to learn about the large scope of advertisement in bussiness and we trust our contemporary will educate the Indian public this important subject also—we wish 'Advertising India' a bright future.

THE 'HINDU MESSAGE' (*weekly*) SRIRANGAM
Rs 6/- per-annaum. This is a weekly review of India and world from the Hindu standpoint. Every issue contains a very soul stirring poem by our South Indian Tagore Mr. K. S. Ramasamy Sastri and very interesting leading articles from the pen of the learned editor and other thought provoking contributions from wellknown writers of Hindu culture and great learning. We always welcome the Hindu message and wish it every success.

THE 'JUNGLE WALLAH' (*weekly*) MADRAS. This is a weekly journal edited by Mr. C. D. Parthasarathy late of the Madras Forests:—Every issue of it contains very useful articles on Topics connected with forestry and Forest Department The editor is also an enthuriartic advocate of the cause of the Indian officers and Subordinates in the Forest Department—The lay buplic can gather very useful informations study many things and from the jungle walla—We trust that the 'jungle wallah' is well appreciated by the public and wish it all success.

THE 'INDIAN COOKERY' (*monthly*) EGMORE.
Rs 2/8 per-annum. The interesting magazine is published mainly in the interests of the culinary art. Some pages of it are also devoted for domestic economy, hygiene and house management. The culinary art is greatly neglected in these days as the business of servants and consequently many people eat what their servants cook for them and suffer indigestion and other troubles. It is a scientific art and those who select their food materials according to their nutritious value and cook them scientifically will be able to enjoy them and be healthy. The 'Indian cookery' imparts

this scientific knowledge on this subject and we trust all our husifs will patronise this useful magazine. and we wish it long life.

HYGIENE AND MORAL EDUCATION

By. E. B. TURNER, F. R. C. S.

This irregular sex intercourse is essential to health of the individual is a popular fallacy which cannot too strongly be combated. If I could put it more plainly I would do so.

To an ideal of purity we must all strive. We must give a lead to public opinion. We must help the young and impressionable. We now have a Ministry of Health which has a big task before it; it has to improve the health of the community, thereby at the same time improving its morals. In connection with the control of veneral diseases it is working with the National Council for Combating Venereal Disease, which is subsidised very largely by theMinistry, which is using the society in matter of propaganda—propaganda based upon a high moral code The inculcation of morality must be approached by knowledge and education. The Board of Education is in favour of education with regard to morality, more especially sexual morality and the facts of life. It is essential that the child, from the earliest years, should be taught these facts reverently and decently, in order that he may not pick them up promiscuously and in ugly fashion later on. Parents should not lie to their children when they question as to how they were born. They should not shirk the task of speaking the truth.

My own experience is that father sare more inclined to shirk it than mothers; or rather mothers shirk it and fathers refuse it. Parents should begin at the earliest ages. One of the methods adopted for giving education on these matters is the film. The propaganda film. 'The End of the Road,' is an example of this.

By means of nature-studies, through zoology, biology, and so on into the higher forms of life, the youngest children can be taught the elementary facts of human life. Konwledge in these matters is power; ignorance is a curse. If children grow in knowledge, they will gradually appreciate the graver, the more difficult, and even the horrible facts that will have to be put before them before they are launched into the world. It is an unpardonable sin to let then loose n the world without letting them know absolutely what are the consequences that may attend one single lapse from the the moral path.

Not only must we as individuals and as parents do our duty to the children, but we must help the Ministry of Health in every possible way to combat venereal desease. Nothing helps them more than family effort. Working also in harmony with the Ministry of Health is the People's League of Health. This body consists of an extraordinarily strong Medical Council, and a most influential Lay Council. The object of the League is to lay before the people all things that are necessary to educate them in health The League is seeking to form branches all over the kingdom, through which it can act. It is taking a strong lead in the grave question of infant mortality. There are 1,000,000 children mentally and physically defective and unable to derive reasonable benefit from education. There were in 1917 nearly 56000 deaths from tuberculosis in this country, and in the following year 92000 fresh cases were notified. It is an extra-odinary thing that the effect of tuberculosis is to make people unmoral or immoral. People suffering from tuberculosis have tremendous impulses towards immorality. Thus it is a case of illness tending towards immorality.

There is also the question of lunacy, which embraces something like 130,000 people. Mental instability is a great factor in stimulating immorality; immorality is a great factor in inducing serious illness: it works in a vicious circle.

Venereal diseases are very prevalent in the industrial distcicts. There were, it is calculated, 400,000 casualties in the British fighting forces from venereal disease; during the war,

When we come to consider the effect of preventable diseases on the man-power of the nation, the facts are astounding. According to the report of the Ministry of Pensions on the result of the medical examinations under the Military Service Acts, only one man in three was absolutely normally healthy, and one man in every ten was a physical wreck. My comment upon these figures is that if one gets a C 3 nation in bealth one gets a C 3 naton in morals.

Only by education in morality and by education in the laws of health can we check immorality and degeneracy. One of the truest things stated in the People's League of Health's manifesto, is that it is better to errect a strong fence at the top of the cliff than to maintain a working ambulance at the bottom. Educate the people in morals rather than start Rescue Institutions to drag them out of the mire into which they have fallen. Branches of this League are needed in every part of the world, so that the health and moral standard of this nation and all other English-speaking peoples may be raised.

The one great ideal that should be aimed at is nation fit and healthy in mind and body and spirit. If the standard of health raised the standard of morality will rise too.

EXCHANGES

We thankfully acknowledge rceipt of the following exchanges.

83.	The	'Dhanavaisya Nzhion'	Uaraikudy	(weekly)
84.	„	'Travancore times'	Nagercoil	(weekly)
85.	„	'Visisttadawvita sidhanta deepica'	Madras	(monthly)
86.	„	'Kalpatharu'	Pondichery.	(monthly)
87.	„	'Atmasakti'	Do.	(monthly)
88.	„	'Advertising India'	Madras.	(fortnightly)
89.	„	'Amrita Barathi'	Quilon	(weekly)
90.	„	'Dhanuntari,	Kottakal	(monthly)
91.	„	'Thamash'	Quilon	(fortnightly)
92.	„	'Kerala chandrika'	Do	(weekly)
93.	„	'Srivaghovu Kore'	Do.	(weekly)
94.	„	'Muslim Mahilla'	Ernakulam	(monthly)

ஆரோக்கியமும் சிசுவின் சுகவாழ்வும்

"நோயற்ற வாழ்வே
குறைவற்ற செல்வம்"

"மக்கட்பேற்றில்
பெரும் பேறில்லை"

பகுதி 1.   1098-ம் ளு ஆவணி ௴ 1௳   தொகுதி 5

பிள்ளைபாதுகாக்கும் முறை

முன் 82-ம் பக்கம் தொடர்ச்சி

சுத்தம். உஷ்ணகாலத்தில் குழந்தைகளின் உடைகளை ஒருநாளில் இரண்டு மூன்று தரம் மாற்றவேண்டிய விஷயத்தைப்பற்றி முன்னமே சொல்லப்பட்டிருக்கிறது. குழந்தைகளுடைய தலைமுடியை எப்போதும் சிக்கில்லாமல் சீவிவைக்கவேண்டும். குழந்தை தன் இழமைபருவ முதலே சுத்தமாகவும் சிறப்பாகவும் இருந்து வரும்படி பழக்கப்படவேண்டும் குழந்தையின் உடலும உடையும் மட்டும சுத்தமாயிருத்தல் போதுமானதாகாது. அது ஒடி ஆடி விளையாடும் இடங்களும் யாதொரு அழுக்குமின்றி சுத்தமாயிருக்கவேண்டும். ஏனெனில் குழந்தைகள் ஊர்ந்து விளையாடும் சமயத்தில் அவ்விடங்களிலுள்ள அசுத்தங்களில் ஒட்டியிருக்கும் க்ஷயரோகக் கிரிமிகளை உட்கொள்வதினால் அவ்விளம்பிராயத்திலே அக்குழந்தைகளின் சரீரம க்ஷயரோகத்திற்கு உற்பத்திஸ்தானமாகி விடுகிறதென்று மெச்சினிக்காவ் என்பவர் நிரூபித்திருக்கிறார். ஆகையால் வீடுகளில் தளம் வெகு சுத்தமாயிருந்தாலின்றி குழந்தைகளை அவ்விடங்களில் ஊர்ந்து விளையாடவிடக்கூடாது. குழந்தைகள் சாப்பிடுமுன்னரும் மற்றும் நேரங்களிலும் அடிக்கடி அவற்றின்கைகளை சுத்தம் செய்யவேண்டும். இல்லாவிடில் தங்களுடைய அழுக்கான விரல்களை வாயில்வைத்துக் கொள்வதினால் பலவிதமான தொந்தரவுக்கிடமாகிறது. குழந்தைகளின் வாயும் எப்போதும் சுத்தமாய் வைக்கப்படவேண்டும். தாய்மார் தங்கள் பிள்ளைகள் ஒவ்வொரு நாள் காலையிலும் மாலையிலும் பல் துலக்கிவரும்படி ஏற்பாடு செய்யவேண்டும். பல்

துலக்க சக்தியில்லாத குழந்தைகளுக்கு தாய்மாரே அப்படி பல்துலக்கி வரவேண்டும். கடவாய்ப் பற்களின் மேல்பாகம் நன்றாய் சுத்தமாயிருக்கும்படி பல் துலக்கவேண்டும். சாப்பிடும் ஆகாரத்தின் சிறு சிறு பாகங்கள் பற்களுக்கிடையில் தங்கிக்கொள்வதினால் அவைகள் அழுகி பற்களைக் கெடுத்து வாயில் துர்வீச்சத்தையும் உண்டாக்கிவிடுகிறது. ஆகையினால் ஒவ்வொரு நாளிரவிலும் படுக்கைக்கு போகுமுன் வாயில் தண்ணீர்விட்டு நன்றாய் உரசி கொப்புளிப்பதுடன் விரல்கொண்டு பல் துலக்குவதுபோல் நன்றாய் தேய்த்து சுத்தம் செய்வது உசிதம்.

காலையில் எழுந்தவுடன் குழந்தைகளின் கண்களை சுத்தஜலம் கொண்டு வெகு ஜாக்கிரதையுடன் மெதுவாய் கழுவவேண்டும். ஓர் குச்சியின் நுனியில் இலேசாய் பஞ்சு சுற்றி அதன் உதவியால் செவிதுவாரங்களை ஒரோவேளையில் சுத்தம் செய்யவேண்டும். பென்சில்போலொத்த கடினமும் கூர்மையுமான குச்சிகள் கொண்டு காது சுத்தம் செய்யக்கூடாது; செய்தால் சொற்ப அஜாககிறதையினால் செவியினுள்ளிருக்கும் சவ்வுபோன்ற மெல்லிய தோலில் குச்சிபட்டுவிடும் அப்போது அம்மெல்லிய தோல் பிளவுபட்டு செவிடு என்று சொல்லும்படியாய் காது கேளாமற் போய்விடும்,

அநேகம் குழந்தைகள் மூக்கைக்கிள்ளுதல், வாய்க்குள் விரல்களை வைத்துக்கொள்ளுதல், துணி சவைத்தல், நகம் கடித்தல் முதலிய துர்பழக்கங்களை தாங்களறியாமலே செய்துவருகின்றனர். அவ்வித பழக்கங்கள் கிருமி முதலிய பலவகை நோய்களுக்கு காரணமாகின்றது ஆனதுபற்றி அவ்வித பழக்கங்களினின்றும் குழந்தைகளை விடுவித்து ஜாக்கிறதையாய்ப் பார்த்துவரவேண்டும்.

சுத்த ஆகாயம். ஆரோக்கியப் பாதுகாப்புக்கு சுத்தஆகாயம் வெகு அவசியமானது. சுத்த ஆகாயம் பெரியவர்களுக்கு எவ்வளவு சுகத்தை கொடுக்கிறதோ அவ்வளவு குழந்தைகளுக்கும் கொடுக்கிறது நாம் எப்போதும் சுத்த ஆகாயத்தை வாயினாலல்லாமல் மூக்கினாலேயே சுவாசிக்கவேண்டும். குழந்தைகளையும் அப்படியே பழக்கவேண்டும் ஏனெனில் நமமூக்கினுள் அமைந்திருக்கும் கருவிகளின் உதவியினால் நாம் சுவாசிக்கும் ஆகாயம் நமது ஆரோக்கியத்திற் கேற்றவிதமாய் சுத்தமாய் பக்குவப்படுத்தி நுரையீரலுக்கு அனுப்பப்படுகிறது. மேலும் மூக்கானது முகரும் தன்மையுடையதானதால் சுவாசிக்கிறதற்கு தகாதான அசுத்த ஆகாயத்தை கண்டுபிடித்து விலக்கிக்கொள்ளுவதற்கும் ஏதுவாயிருக்கிறது. நாம் வெளிவிடும் சுவாசமானது விஷக்காற்றும் அசுத்தமும் நிறைந்ததாயிருக்கும் அவ்வித விஷமும் அசுத்தமும் நிறைந்த காற்றை சடுதியில் போக்கி சுத்தமான காற்று வீசும்படியாய் நாம் வசிக்கும் இடத்தையும் படுக்கை அறையையும் வைத்துக்கொள்ளவேண்டும் அப்படி வைத்துக்கொள்ளாத விஷயத்தில் நாம் வெளிவிடும் அசுத்த

ஆகாயத்தையே மாறி மாறி சுவாசிப்பதினால் பலவித தீங்குகளுக்கிடமாகிறது. சுத்தஆகாயம் சுவாசிக்காத குழந்தைகள் சாதாரணமாய் சரீரம் வெளுத்தும், மெலிந்தும் துர்பலமாயுமிருக்கக் காணலாம். இவ்வித குழந்தைகள் வெகு எளிதில் நோய்க்குட்பட்டு வருந்தும். ஆகையால் குழந்தைகளை நல்ல சுத்தமான ஆகாயம் வீசத்தக்கதான காற்றோட்டமுள்ள அறையில் தூங்கவைக்கவேண்டும். ஓர் அறையானது அசுத்தமாக வைக்கப்பட்டிருந்தால் அதனுள்ளிருக்கும் ஆகாயமும் அசுத்தமாகவேயிருக்கும். பெரியவர்களை பார்க்கிலும் சிசுக்களுக்கு மிகுதியான சுத்த ஆகாயம் தேவை. அப்படிமிகுதியான சுத்த ஆகாயம் உட்கொண்டு வரும் குழந்தைகளுக்கு க்ஷயரோகம் முதலிய வியாதிகள் கிஞ்சிட்டும் அணுகாது. குழந்தைகள் திறந்த வெளிகளில் இருந்து தங்களுடைய நேரத்தை போக்கவேண்டும். பள்ளிக்கூடங்களில் கூட திறப்பான வெளிகளில வைத்து சிறு குழந்தைகளுக்கு பாடம் கற்பிக்க வேண்டுமென்றும பலர் அபிப்பிராயப்படுகிறார்கள். அங்ஙனம் செய்வது பலவகையிலும் சிறந்ததே. குழந்தைகளுடைய படுக்கை அறைகளில குளிர்காலங்களிலகூட காற்றோட்டம் இலேசாயிருந்து வரும்படியான வகைக்கு ஏதுவாய் வாசல ஜன்னல்களை அமைக்கவேண்டும். சூரிய வெளிச்சமும் ஆரோக்கியத்திற்கு அத்தியாவசியமென சமீபத்தில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது சூரியவெளிச்சம் தாராளமாயிருக்கிற அறையானது ஆரோக்கியமாய் வாசஞ்செய்வதற்கு உகந்தது.

இன்னும் வரும்

பத்திராதிபர் குறிப்புகள்

நமது பத்திரிகையானது எல்லா விடங்களிலும் பலராலும் வெகு அன்புடன் ஆதரிக்கப்பட்டுவருகிறதென்பதை மிக்க நன்றியறிதலுடன் வெளியிடுகின்றோம். அநேகம் மாதர்கள் இப்பத்திரிகையை வெகு வைராக்கிய சிந்தனையாய் வாசித்து வருவதை கேட்டு மிகு ஆனந்திக்கின்றனம். முந்தின மாசத்து சஞ்சிகையில் ஓர் சந்தா மாது நமது பத்திரிகையைப் பற்றிய மதிப்புரையொப்ப ஓர் கடிதம் வரைந்துள்ளார். இ மாதத்து சஞ்சிகையிலும் கார்கார்த்தார் வம்சத்தினரான ஓர் சந்தா பெண்மணியானவர் விஷய தானம்புரிய முன் வந்துளர். அவ்விஷயத்தை பிந்தின பக்கங்களிற் காணலாம். இபெண்மணிகளநேகர் நமது பத்திரிகையை வாசித்து அநேகமாய் நன்மையடைந்து வருகின்றாரென பலராலும் உவப்புடன் கேள்விப்படுகின்றோம். நமது முதலாவது மாசத்து சஞ்சிகையில் கூறப்பட்டுள்ள 'தாயது வேலை' என்னும் விஷயத்தை வாசிக்கப் பெற்ற சிலகெர்ப்பிணிகள் அதிற் கூறிய பிரகாரம் முன்னெச்சரிப்புடன் ஜாக்கிரதையாய் நடந்து வந்ததினால் யாதொரு கஷ்டமுமின்றி சுகப்பிரசவம் அடைந்தார்களென்று நமக்கு சமாச்சாரம் எட்டுகிறது. இன்னும் சில கெர்ப்பிணிகள் நமது பத்திரிகை

யில் வெளியிட்ட பிரகாரம் சேர்ந்த வைத்திய உதவியினால் மூத்திர பரிசோதனை செய்து ஆகாரத்தை ஒழுங்குபடுத்தி வந்ததினால் கஷ்டப்பிரசவம், பிரசவகாலத்தில் வரும் யானை வலி குதிரை வலி முதலிய கொரோமான வியாதிகளினின்றும் தப்பி சுகப்பிரசவமடைந்தார்களென கேள்வியுறுகின்றோம். இவ்விதம் யாதொரு செலவுமின்றிமுன் எச்சரிக்கையுடன் தங்களை காத்துக்கொண்டவர்களின் செய்தியானது அவ்விதம் முன் எச்சரிக்கையில்லாமல் அவஸ்தைப்பட்டு பணச்செலவு செய்தும் குணமடையாமல் வருந்துகிறவர்களின் காதில் பட்டால் அவர்கள் மனம் எப்படியிருக்குமென்பதை இதை வாசிப்பவர்களே யூகித்துக்கொள்ளலாம்.

இவ்விதமாக நம் பலருக்கும் பலவகையிலும் அத்யாவசிய உபயோகமாயிருக்கக் கூடிய நமது பத்திரிகையைப் பற்றி நூற்றுக்கணக்கான பேர் சிறப்புரைகளும் மதிப்புரைகளும் வரைந்துகொண்டிருக்கையில்

"நறுநெய் நிரை * புழுக்கல் உய்ப்பினும்
† மூழை பெறுமோ சுவை உணருமாறு"

என்பதுபோலுள்ள ஒருவாயின் வரையப்பட்டு சடிதங்களை எங்களுக்கனுப்பியிருக்கிறார். அக்கடிதம் ஆபிரக்துள் ஒன்றேபாதவி அவற்றின் குணபேதங்களை விஸ்தரியாமல் அப்படியே அச்சிலிடுகிறதினால் அவரின் நோக்கத்தை வாசிப்போர்களே அறிந்துகொள்வார்களென்று நம்புகிறோம்.

(1) From

T. V. R. INDRA TALAIVER,
ZAMINDAR SURANDAI P. O.
Tinnevelly Dt.

"Please be good enough not to send the Magazine as we derive no use from it.

(Signed) T V. R. I.

இதற்குத்தமிழ்.

திருநெல்வேலி ஜில்லா, சுரண்டை P. O. ஜமீன்தார் 1, V R. இந்திரதலைவரிடமிருந்து,

தங்கள் பத்திரிகையினால் எங்களுக்கு யாதொரு பிரயோஜனமில்லாததினால் தயவுசெய்து அனுப்பவேண்டாம்".

(ஒப்பம்) T. V. R I.

---

* சோறு † அகப்பை

இசர் கூற்றூலும் கிஞ்செட்டும் மனர்தளராமல் ஏனைய நூற்றுக் கணக்கானவர் தங்களுக்கு இப்பத்திரிகையால் வெகு பிரயோஜனமுண்டென்றும், இவ்வகைப்பத்திரத்தில் தாங்கள் வெகு பிரீதியாயிருக்கிறார்களென்றும் எழுதி அனுப்பியிருக்கும் யதார்த்த மதிப்புரைகளை மேற்கொண்டே பத்திரிகையை ஒழுங்காய் நடத்திவரத் துணிகின்றோம். அன்னோரின் கடிதங்களையும் இடம் கிடைக்கும்போது வெளியிடச் சித்தமாயிருக்கிறோம்.

* * * *

நமக்கு அடிக்கடி வந்துகொண்டிருக்கும் மாற்றுப் பத்திரங்களினின்றும் நாம் அறிந்து வருவது யாதெனில் நமது ராஜதானியாகிய சென்னை ராஜதானியிலுள்ள பல ஜில்லாக்களிலும் தினசரி, வாரமிருமுறை, வாராந்தர, பக்ஷாந்தர, மாதாந்தர பத்திரிகைகள் வெகுவாய் பிரசுரமாகிக்கொண்டிருக்கின்றது. நமது ஜில்லாவாகிய திருநெல்வேலியிலோ அவ்வகைப் பத்திரங்கள் அரிதினும் அரிதாயிருக்கிறதை நினைக்க நினைக்க நமது மனம் வெகுவாய் துன்புறுகின்றது. நமது சஞ்சிகையின் சந்தாதாரரில் மூவர் சந்தாத் தொகையை முன் பணம் அனுப்பிவிட்டு பின் அனுப்பிய சஞ்சிகையை வேண்டாமென்று திருப்பிவிட்டார்கள். இதற்கு காரணம் என்னவாயிருக்குமென்று யோசிக்குங்கால் இவர்களுக்கனுப்பப்படும் ஒவ்வொரு மாசத்து சஞ்சிகைக்கும் ரூபாய் கொடுக்கவேணுமேயென்ற பயத்தினாலென்று ஊகித்தோம். என்னே இவர்கள் தம் பேதைமை. இவர்கள் முதல்தரமாய் கொடுத்த வருட சந்தா தொகைக்கு 12 மாதமும் சஞ்சிகை தங்களுக்கு இலவசமாய் வந்துகொண்டிருக்குமென்பதை நாமே அவர்களுக்கு தெரிவிக்கவேண்டியதாயிருக்கிறது. நமது ஜில்லாவாசிகளில் சிலர் இந்நிலைமையிலிருக்க, சிறிது நாட்களுக்கு முன்னர் கொல்லம் ரெயில்வே ஸ்டேஷன் வெய்ட்டிங் ரூ (waiting room)மில் கொஞ்சம் நேரம் புகைவண்டியை எதிர்பார்த்து நிற்கும் சமயத்தில் மலையாள ரெயில்வே போர்ட்டர்கள் (கூலியாட்கள்) விருந்தாவில் நின்று ஒருவருக்கொருவர் அவ்வூர் வர்த்தமானப்பத்திரிகையினின்றும் தாங்கள் வாசித்த ஓர் விஷயத்தைக் குறித்து தர்க்கம் செய்துகொண்டிருப்பதை நேரில் கேட்டோம். இவர்கள் நிலைமையையும் நம் ஜில்லாவாசிகள் நிலைமையையும் ஒப்பிட்டுப்பாருங்கள். பத்திரங்கள் விஷயமாய் இவ்வளவு சீர்கெட்ட நிலைமையிலிருக்கும் நமது திருநெல்வேலியில் 'குருடனுக்கு கண் திறந்தது போல் 'கிராமபரிபாலனம்' என்னும் பக்ஷாந்தர பத்திரிகை சில மாசங்களாக தோன்றி சிறப்புடன் நடந்து வருவதைக் கண்டு மிக்கு ஆனந்திக்கின்றனம். இதுவும் தற்போது பக்ஷாந்தரத்தினின்றும் வாராந்தரமாக மாறுதலடைந்து நமது நகரவாசிகளுக்கிடையில் அடிக்கடி உலாவ் வர ஆரம்பித்திருக்கிறது. நமது சகஜீவியாகிய 'கிராமபரிபாலனம்' நீடூழிகாலம் வளர்ந்தோங்கி நம்மவர்க்கு என்றும் பிரயோஜனப்படும்படியாய் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிவாராக.

* * * *

நமது யாழ்ப்பாணத்து சகஜீவியாகிய 'இந்து சாதன' மானது இம் மாசமுதல் வாரமிருமுறைப் பத்திரமாய் வெளிவருகிறதைப் பற்றி மிக்கு சந்தோஷமுறுகின்றனம். நமது சகஜீவியும் சகல வகையிலும் விருத்தியாமாறு விரும்புகின்றோம்.

* * * *

நமது பத்திரத்தை வாசிப்பவரனேகர் இப்பத்திரிகையில் வர்த்தமானங்களும் கதைகளும் பிரசுரம் செய்யுமாறு எங்களை வேண்டுகின்றனர்- ஆனால் நம் பத்திரிகையானது தன் தலைப்பெயருக்கேற்ப ஆரோக்கிய சம்பந்தமான விஷயங்களைமட்டுமே பிரசுரிக்க உரித்தாதலின் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க இயலாதது பற்றி வருந்துகின்றனம். நமது பத்திரிகையின் முக்கிய நோக்கம், நமது நாட்டு ஜனங்களுக்கு ஆரோக்கியம், பேர்காலம் சிசுவளர்த்தல் முதலிய விஷயங்களைக் குறித்துப் போதித்து அவர்களை அதனால் நன்மையடையச் செய்யவேண்டுமென்பதேயாம். ஆதலின் நாம் வெளியிடும் விஷயங்களும் அது சம்பந்தமாகவேயிருக்கவேண்டும். எங்கள் பத்திரிகைக்கு சில மாதுசிரோன்மணிகள் விஷயதானம் புரிந்து எங்களை ஆதரித்து வருகின்றனர். அவ்வாறே பலரும் விஷயதானம்புரியின் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படுமென்று தெரிவிக்கின்றோம்.

* * * *

தமிழ் வைத்திய சங்க 2-வது மகா நாடு கன்காட்சிகள் நாளது ஆகஸ்டுமீ 18, 19, 20, 21உ களில் நடைபெறுவதாய் தீர்மானித்திருந்ததை ஷை மீ 25, 26, 27 28உ களில் நடைபெறும்படி ஒத்திவைத்திருக்கிறது. இதுவும் சென்னை கோவிந்தப்ப நாயக்கன் தெரு, சௌந்தரிய மகாலில் நடைபெறும். அமைச்சர், வி. சிவஞான யோகிகள், 268 தங்கசாலைத் தெரு. சென்னை

இம் மகா நாடு தன் நோக்கங்களில் சித்தியடைந்து நம் யாவர்க்கும் பயன்பட்டு நலவாய் நிகழ்ந்து முற்றுப்பெறுமாறு மிக்கு விரும்புகின்றனம்

மேலான ஆரோக்கியவிதிகள்

1. நமது சரீரத்தில் விஷம் உண்டாகிக்கொண்டிருக்கிறது. அவ்விஷம் சுவாசத்தினாலும், வியர்வையினாலும் மலம், ஜலம் கழிவதினாலும் வெளியாகிவிடுகிறது. ஆகையால் இவ்வசுத்தங்களை வெளியாக்கும் கருவிகளை சரியாய் வேலைசெய்யக்கூடிய ஸ்திதியில் வைத்து வரவேண்டும் அதாவது மலபந்தம் இல்லாமல் பார்த்துவர வேண்டும் வியர்வை சரியாயிருக்கவேண்டும், சுத்த ஆகாயம் சுவாசிப்பதுடன் நெடுமூச்சு அப்பியாசம் செய்து பழகவேண்டும், மூத்திரகோசங்களும் சரியாய் வேலை செய்ய வேண்டும்.

2. மேலான ஆரோக்கியம் அனுபவிப்பதற்கு அன்னபானாதிகளை சரியாய் ஒழுங்குபடுத்திவரவேண்டும், அளவுக்கு கூடுதலாய் சாப்பிடுவதும் குறைத்து சாப்பிடுவதும் எப்போதும் கெடுதலானது, நமது சரீரத்திற்கு விஷம் ஊட்டக் கூடிய பானங்களை ஒருபோதும் அருந்தக்கூடாது, புகையிலை, அபின், மதுசாரம் இவைகளை அறவே ஒழித்துவிடல் வேண்டும், ஏகதேசம் மருந்தாக உபயோகிக்கலாம். அதுவும் தேர்ந்த வைத்தியருடைய அனுமதியின்றி தொடவே கூடாது.

3. எல்லா அவயவங்களுக்கும் தசைநரம்புகளுக்கும் போதுமான உழைப்பு இருந்து வரவேண்டும். அதற்குத் தகுந்த தேகாப்பியாசங்களை தெரிந் தெடுத்து அப்பியசித்து வரல்வேண்டும்

4. எப்போதும் சந்தோஷகரமான மனதுடனும் நலமானவற்றில் நம்பிக்கையுடனும் எதைச் செய்தாலும் சித்திபெறலாம் என்கிற சர்வானுகூலவாதமான மனதுடன் இருக்கவேண்டும். ஓர் வியாதியைப்பற்றி பயப்படுதலே அவ்வியாதி நமக்கு வருவதற்கு ஓர் முக்கியமான காரணமாகும், ஏதாவதோர் வியாதியைப்பற்றி அது நமக்கு வந்துவிடுமோவென்று பயந்துகொண்டிருந்தால் அவ்வியாதி உற்பத்தியாகக் கூடியதான நம் சரீர உறுப்புகள் மேற்கண்ட பயத்தினால் தங்களுடைய சுயதிடபலத்தை யிழந்து அவ்வியாதியை யடைந்து விடுகிறது, ஆகையால் எவ்வகை வியாதியைக் குறித்தும் கொஞ்சமேனும் மனதிற் பயங்கொள்ளாமல் தைரியமாயிருந்து வரவேண்டும். தொல்லை நோய்களான தொத்து வியாதிகளைப் பற்றி மனதிற் யாதொரு பயமும் கலக்கமுமில்லாமல் அவற்றை தடுத்துக்கொள்வதான முறைகளை கையாடி வரவேண்டும்.

5. விசுவாசம் அல்லது நம்பிக்கை எல்லாவற்றிலும் மேலான விதியாகிறது, விசுவாசமே மானிடருக்கு வழிபாடாயிருக்கிறது, விசுவாசம் என்பது இல்லையானால் நாம் ஒருகாரியமும் செய்து சித்திபெறமுடியாது. விசுவாசமின்றி எக்காரியம் செய்யினும் அது பாழாய் முடிந்துவிடுமென்பதற்கு ஐயமின்று. நாம் எவ்விடத்திலிருந்து எவ்வகை வியாதியில் கஷ்டப்பட்டாலும் சரி நாம் குணமடைவோம் என்கிற விசுவாசம் அல்லது நம்பிக்கை திட்டமாய் நம்மனதில் வேரூன்றியிருக்குமானால் குணமகிடைத்தே தீரும். சிலருக்கு மருந்தின்பேரில் நம்பிக்கை சிலருக்கு வைத்தியர் பேரில் நம்பிக்கை சிலருக்கு கடவுள்பேரில் நம்பிக்கை எதுவானாலும் சரி நம்பிக்கை வேண்டியது அவசியம். இந்துக்களில் சிலர் தாம்வழிபடும் தேவதைமேல் விசுவாசம் வைத்து வியாதியஸ்தரை சொஸ்தமாக்குகிறார்கள் கிறிஸ்தவர்கள் சிலர் ஜெபத்தினால் அங்ஙனம் செய்கிறார்கள் மற்றும் மதஸ்தினரும் அப்படியே நடத்துகிறார்கள். எல்லாம் விசுவாசம் ஒன்றிருந்தால்தான் நடக்கும். தான் தாம் வழிபடுகடவுளை விசுவாசிப்பதுதான் மேலான விசுவாசம். ஏதாவதோர் ஊரில் கொள்ளைநோய் பரவி உபாதிக்கிறதென்றால் அவ்வூரார் ஒன்று சேர்ந்து பொதுச்செலவில் தாம்

வழிபடுகடவுளை ஜெபத்தினாலோ, கொடையினாலோ பிரியப்படுத்தி விசுவாசிக்கிறார்கள், அதற்குப்பலனாக அத்தொல்லைநோயும் குறைந்து நசிக்கிறது, ஆகவே விசுவாசமென்பது உண்டானால் எக்காரியமும் சாதிக்கலாம், இதை வாசிக்கும் நண்பர்களே எவ்வகை காரியத்தையும் சாதிக்க வேண்டுமானால் எல்லாவற்றிலும் மேலாயிருக்கிற விசுவாசம் என்னும் சக்தியை விருத்திசெய்து கொள்ளுங்கள் நமக்கு வியாதிவராது என்கிற முழுவிசுவாசத்துடன் ஆரோக்கிய விதிகளை அனுசரித்து வருவீர்களானால் ஆயுளுள்ளளவும் வியாதி என்பது உங்கள் நிழலையும் கூட அணுகாது. இத்தகைய விசுவாசத்தை திடமனதாய்க் கொண்ட கிழவர்கள் கூட யௌவனராய் இருந்துவருவதை கண்கூடாய் பார்க்கலாம்

காலராவை தடுப்பதற்கான விதிகள்

காலரா என்னும் விஷபேதியானது ஒவ்வொரு வருஷத்திலும் செப்டம்பர் அக்டோபர் நவம்பர் டிசம்பர் ஆகிய மாசங்களில் வழக்கமாய் நடந்துவருவதால் அதன் ஆரம்பகாலமாகிய தற்சமயத்தில் அதை தடுப்பதற்கான பல விதிகளையும் பலரும் அறிந்துகொள்ளும் பொருட்டு எழுதப்படுகிறது.

காலராவானது வாயின் வழியாகவே சரீரத்துள் செல்லுகிறது. அதாவது நாம் சாப்பிடும் ஆகாரத்திலும் குடிக்கும் தண்ணீரிலுமாக அணு தரிசினி கொண்டல்லாமல் பார்க்கமுடியாத சிறு சிறு விஷக்கிருமிகள் ஏற்படுவதினால் உண்டாகிறது. இவ்வித கிருமிகள் உஷ்ணம் பட்டால் செத்துவிடும். ஆகையால் நமக்கு எளிதில் கிடைக்கக்கூடியதான அக்கினிப் பிரயோகத்தினாலும் வெந்நீர் பிரயோகத்தினாலும் தடுத்துக் கொள்ளலாம்

பின்வரும் குறிப்புகளை கவனித்து அவற்றின்படி நடந்துவந்தால் காலராவை வரவொட்டாமல் செய்யலாம்.

1. நாம் குடிப்பதற்கு உபயோகப்படுத்தும் ஜலத்தை நன்றாய் கொதிக்கவைத்து மூடியுள்ள பாத்திரத்தில் வைத்திருக்கவேண்டும். தேவையான நேரத்தில் கைகொண்டு முக்காமல் சிறுபாத்திரங்களில் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்படியில்லாவிட்டால் கைகளிலுள்ள காலராப்பூச்சிகள் தண்ணீரில் கலந்துவிடும்.

2. நமது கைகளை நன்றாய் கொதிக்கவைத்த தண்ணீரில் சுத்தம் செய்யாமல், நாம் சாப்பிடும் ஆகாரத்தையாவது குடிக்கும் தண்ணீரையாவது தொடவேகூடாது.

3. சமைக்கப்படாத காய்கனிவகைகளை சாப்பிடவேகூடாது. சமைத்த ஆகாரத்தை மட்டும் சாப்பிடவேண்டும், நன்றாய் கொதிக்க வைத்த தண்ணீரில் பழங்களை சிறிதுநேரம் வைத்திருந்து பின் உபயோகப்படுத்துவது ரொம்ப நல்லது.

4. ஈக்களானவை மலங்களினின்றும் காலரு பூச்சிகளை தங்கள் கால்களில் கொண்டுவந்து நாம் சாப்பிடும் ஆகாரங்களில் சேர்த்துவிடுகிறது. ஆகையால் ஈக்கள் வந்து மொய்க்காதபடி நாம் சாப்பிடும் ஆகாரங்களை சமயலானவுடன் நன்றாய் மூடிவைக்கவேண்டும்

5. பாலில் சேர்க்கக்கூடிய தண்ணீரை நன்றாய் கொதிக்கவைக்க வேண்டும்.

6. இறைச்சி, மீன்கள் முதலானது செவ்வனே சமைக்கப்பட வேண்டும்.

7. சமையல் அறையும் நாம் சமையல் சாப்பாட்டிற்கு உபயோகபடுத்தும் சகல பாத்திரசாமான்களும் வெகுசுத்தமாய் வைக்கப்பட வேண்டும்.

8. நாம் வாசம்செய்யும் இடமும் வீட்டின் தளமும் மற்றும் இடங்களும் சர்வசுத்தமாகவே வைக்கப்பட்டிருக்கவேண்டும்.

9. கக்கூசில் சுண்ணாம்புத்தண்ணீராவது கர்பாலிக்ஆசிட்டாவது தெளித்து சுத்தமாய்வைத்திருக்கவேணடும் அல்லது மலங்களை தரையில் புதைத்துவிடலாம்.

10. நோயாளிகளிடத்தில் பலரும் அடிக்கடி போகக்கூடாது.

11. நோயாளிகளுடைய அழுக்கு, வாந்தி மலங்கள் முதலியவைகளை உடனேக்குடன் அப்புறப்படுத்தி வெந்நீர் கொண்டு சுத்தம் பண்ணவேண்டும்.

12. நோயாளிகள் உபயோகப்படுத்தின வஸ்திரங்களையும் படுக்கையையும் நன்றாய் வெந்நீரில் அவிக்கவேண்டும். அப்படிப்பட்ட துணிகளை கிணறுகள் பக்கங்களிலாவது குளம் குட்டைகளிலாவது தோய்ப்பது கூடாது.

தமிழ் மருந்து

BY

ஸ்ரீமதி ஆழ்வாரம்மாள், திருநெல்வேலி

இவ்வுலகத்தில் ஒவ்வொரு தேசத்திலும் நோய்களால் ஜனங்கள் வருந்துவதைப் பார்க்கிறோம். சந்தோஷமாய் ஜனங்கள் வாழ வொட்டாமல் துன்பம் செய்வது நோயாகும் ஒருவனுக்கு நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும் மற்றைய எல்லாச் செல்வங்களும் இருந்தபோதிலும் நோயற்ற உடம்பு இல்லையானல், உலகவாழ்க்கை துன்பமாகவே தோன்றும். ஒருவனுக்கு மிகுந்த செல்வ மிருந்தாலும் நீராப்பணி கொண்டிருப்பானனல், இவ்வுலகத்தில் இருந்து துன்பப்படுவதைப் பார்க்கிலும், இறத்தலே நல்லது என்று துணிந்து தற்கொலை செய்து கொண்டாலும் கொள்ளுவான். நோயால் பொறுக்க முடியாததுன்பம் அடைந்தவர்கள்,

சாவு எப்பொழுதுவரும் என்று அவனுடன் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். நோயில்லாத உடம்பு இருந்தால் உலகவாழ்க்கையில் இன்பம் காணப்படும், நோயால் பீடிக்கப்பட்டிருந்தால் உயிரோடு இருக்கும் ஒவ்வொரு நொடிப்பொழுதும் துன்பமாகவே தோன்றும் ஆகலால் ஒவ்வொருவரும் நோய்வாராமற் பாதுகாத்துக் கொள்ள வழி தேடவேண்டும்.

தமிழ் மருந்தைப்பற்றிச் சொல்லுகிற நூல்களில், சிலவியாதிகளைக் கருமவியாதிகள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதாவது மறுஜென்மம் உண்டு என்று இந்துக்கள் நம்புகிறபடியால், முன் ஜென்மத்தில் செய்த கருமத்தால் வருகிற வியாதிகளைக் கருமயாதிகள் என்று சொல்லுவார்கள். இப்படிப்பட்ட வியாதிமருந்துகளால் மாளாது என்று தமிழ் வைத்தியர்கள் சொல்லுவார்கள். அந்த நோயால் எவ்வளவு காலம் துன்பப்படவேண்டுமென்று விதித்திருக்கிறதோ, அவ்வளவு காலமும் கழிந்தால்தான் அந்த நோய் நீங்கும்.

ஆனால் கருமத்தால் அல்லாமல், மற்றைய காரணங்களாலும், வியாதிகள் வருகிறதுண்டு. கிருமிகளாலும், விஷத்தாலும், சீதோஷணஸ்திதிகளாலும் மற்றையகாரணங்களாலும நோய்கள் உண்டாகின்றன நோய்க்குமருந்து தேடுவது ஒவ்வொரு தேசத்திலும் வழக்கம். ஆனால் நம்முடைய தேசத்தில் மந்திரத்தாலும், மருந்தாலும் நோயைக்குணப்படுத்துவார்கள். சிலர் மந்திரத்தில் நம்பிக்கை யில்லாமல், மந்திரத்தில் மாங்காய் விழுமா என்று பரிகாசம் பண்ணுவார்கள். ஆனால் மந்திரத்தால் முக்கியமான விஷநோய்கள் நீங்குவதை நாம் கண்டும் கேட்டும் இருக்கிறோம். நல்ல பாம்பு ஒருவனைக் கடித்துவிட்டால், அதன் பல்பட்ட பாகத்தை அறுத்துவிடுவதோ, அல்லது சுட்டுவிடுவதோதான் அதற்கு மருந்து என்று சிலர் சொல்லுகிறார்கள், இது பாம்பு கடித்தவுடன் கையாளும் உபாயமே தவிர, விஷம் உடம்பிலெல்லாம் பரவின பிறபாடு, அறுப்பதாலும் சுடுவதாலும் பிரயோஜனமில்லை. இப்படிப்பட்ட விஷம்தீண்டிப் பிரேதம்போல், ஸ்மரணையில்லாமல், இருப்பவனைமந்திரத்தால், உடனே எழுப்பிவிடுவதை நாம் பார்த்திருக்கிறோம். மந்திரத்தால், எறிவிஷம் இறங்கும் இப்படியே விஷகடியால் வந்த வியாதிகளை யெல்லாம், மந்திரத்தால் நீக்கிவிடுகிறார்கள்.

வியாதி வந்தபிறகு மருந்துகொடுத்துத் தீர்ப்பதை விட வியாதிவாராமல் காத்துக் கொள்வதே நல்லதாகும். ஒருவன் சாப்பிடும் ஆகாராதிகளில் ஜாக்கிரதையாருப்பானானால், அவனுக்கு அதிகமாய் நோய் வாராதென்று தமிழ் மருந்துநூல் சொல்லுகிறது. ஆகாரம் அளவுக்குக்குறைந்தாலும் அதிகப்பட்டாலும் நோயைத்தரும். நன்றாய்ப் பசித்த பின்சாப்பிடாமல், முன்னால் உண்டஉணவு ஜீரணமாகாத காலத்தில் சாப்பிடுவதும் வியாதியை உண்டாக்கும். இப்போது சிலர் குறிப்பிட்ட வேளைகளில் சாப்பிடும் வழக்கதை வைத்திருக்கிறார்களே தவிர, பசியோடு சாப்பிடுவ

தாக இல்லை. சிலர் தாம் சாப்பிட்டாய் விட்டதா இல்லையா! என்று வேலைக்காரரிடம் கேட்கும் பழக்கமும் இருக்கிறதாம், ஆகாரத்துக்கு தயார் செய்யும் பொழுது கூடியவரை, இயற்கைக்கு அனுசரித்தே நடந்து கொண்டால் க்ஷேமமாமென்று தெரிந்தோர் சொல்லுகிறார்கள். இயற்கை அமைப்பைப் பார்க்கும்பொழுது ஜனங்களுக்கு ஒவ்வொரு காலத்தில் என்ன உணவு வேண்டுமோ, அதைத்தெரிந்து கொடுப்பது போலத்தோன்றுகிறது. உதாரணமாக, அதிகமாக உஷ்ணமாயிருக்கும் கோடைகாலத்தில, இயற்கையாக விளையும் சாமான்களையும், காய்கறிகளையும் பார்த்தால் இந்த உண்மை நன்றாய்த் தெரியும், வசந்தகாலத்தில் தான், நல்ல ருசியுள்ள பழங்கள் பழுக்கின்றதைப் பார்க்கிறோம் நல்ல இள நீரும், கொங்கும் முதலான குளிர்ச்சிதரும் சாமான்கள்களும் உண்டாகின்றன. வெள்ளரிக்காய் முதலான காய்கறிகளும் உண்டாகின்றன. அக்காலத்தில் இயற்கையாகவே அதிகமாய் விளையும் உணவுப்பொருள்களை உபயோகித்தலே உடம்புக்கு நல்லது என்று சிலர் சொல்லுகிறார்கள், இவ்விதம் உண்ணும் பொருள்களைத் தெரிந்து உண்பவனுக்கு ஒருசிக்கும் இல்லையென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்கள்.

இனி நோய் வந்துவிட்டால். அதற்கு உடனே சிகிச்சை செய்ய வேண்டும். முள்மரத்தை முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்பதைப போல, நோயை ஆரம்பத்தில் குணப்படுத்தாமல முற்றவிட்டு விட்டால். அதிக கஷ்டப்படுத்தும். நோயைக குணப்படுத்தும் வைத்தியன், முதலில் நோயை இன்ன தென்று நிதானிக்கவேண்டும் இரண்டாவது அதன் காரணத்தை தெரிந்து கொள்ள வேண்டும் மூன்றாவது அதைத் தணிக்க மருந்து கொடுக்கவேண்டும். (இன்னும் வரும்)

பெற்றோர் கடமை

(முன் 91-ம் பக்கம் தொடர்ச்சி)

கருக்கொண்டிருக்குங் காலத்தில் பிழைபட்டநடந்தால் அசனுற்பிள்ளைகள் சீர் கெட்டுப்போகின்றன ரென்பதற்கு உண்மையாக நடந்த சில நிகழ்ச்சிகளை இவெடுததுச் சொல்லுகின்றேன். ஒருகால், ஒரு பெண் தான் சூல்கொண்டிருந்த மூன்றாந் திங்களில் (மாதம) ஒரு காடிகுட்டியைப்பாரத்துப் பெருந்திகில் அடைந்தாள். பின்னர் அக்கரு பிள்ளையாய் பிறந்து பதினான்கு ஆண்டு உயிரோடு இருந்தது. அப்பிள்ளை உயிரோடிருந்த காலமெல்லாம் காடிக்குரிய இயல்பும், செய்கையும் உடையதாயிருந்தது.

மற்றொரு பெண்மகள் சூல் கொண்டிருந்தபோது ஒரு கிளிப்பிள்ளையினால் அச்சுறுத்தப்பட்டாள். பின்னர் அவள் பெற்ற பெண் குழந்தையானது கிளிப்பிள்ளையின குரலும் செயலும் உடையதாயிற்று.

மற்றொரு பெருமாட்டி தலை நசுங்கிப்போன ஓர் ஆட்டுக்குட்டியைப்பார்த்து மனம் மருண்டாள். ஈன்றமகவானது தலையின் இருபுறமும் நசுங்கி நெற்றி பிதுங்கியிருந்தது. என்றாலும், அப்பிள்ளையின் அறிவுமாத்திரம் பழுதுபடாமல் விளங்கிற்றாம்.

சில ஆண்டுகளுக்குமுன், ஒரு கால் ஒருகையுடன் ஒரு பெண்பிள்ளை பிறந்தாள். அப்பிள்ளையைப் பலருங்காணும்படி கண்காட்சிக் கழகத்திற் (சாலையிற்) கொண்டு வந்து வைத்தார்கள். இரண்டு திங்களாகக் கருக்கொண்டிருந்த ஒருபெருமாட்டி அப்பிள்ளையைப்பார்க்க மிகுதியும் விரும்பினள்; தன் விருப்ப படியே அதனைப்போய்ப் பார்க்கையில், அவளுக்கு அது மிகவும் புதுமையாகத் தோன்றினமையால், அப்பிள்ளையின் வடிவத்தை அவள் நிரம்பவும் கருத்தாய்ப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் நண்பர்கள் அவளை அதனின்றும் கட்டாயப்படுத்தித்தான் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போனார்கள். பிறகு அப்பிள்ளையின் வேறுபட்ட வடிவம் அப்பெருமாட்டியின் உள்ளத்தில் மறக்கப்படாமல் பதியலாயிற்று, நாள்முழுதும அதைப்பற்றியே பேசிவந்தாள். இரவில் கனவிலும் அவ்வடிவத்தையே கண்டுவந்தாள். கடைசியாகதன் உள்ளத்திற் பதிந்த அவ்வடிவத்தைப் போலவே தனக்கும் பிள்ளைபிறக்குமென்னும் நினைவு அவளுக்கு உண்டாயிற்று. பின்னர்ப் பத்துத்திங்களுங்கழித்து அவளுக்குப் பிள்ளைபிறந்தது; அப்பிள்ளையோ ஐயோ ஒரு காலொடும் ஒரு கையோடும் கூடிய வேறுபட்ட வடிவம் வாய்ந்திருந்தது!

இவ்வாறே சூல்கொண்டிருக்குங் காலங்களில் தாயானவள் எண்ணிய எண்ணங்களும், நினைத்த நினைவுகளும் அவள் வயிற்றகத்தே வைத்திருக்கும் கருவில் எளிதாகப் பதிந்து விடுகின்றன. பெரும்பாலும் பெண்மக்கள் வீண்பேச்சுக்களையும் வீணான எண்ணங்களையுமெள் ரோமுங் கையாளுகின்றவர்களாயிருத்தலால் இவர்களுக்குப் பிறக்கும பிள்ளைகளும் இவர்களோடொத்த பயனற்ற தீய தன்மை உடையவர்களாகவும் அறியாமை உடையவர்களாகவும் இருக்கின்றார்கள். தன்னைகளுக்குத் தந்தையின் இயற்கை சிறிதாகவும் தாயின் இயற்கை பெரிதாகவும பதிவது மேலெடுத்துக்காட்டிய நிகழ்ச்சிகளால் செவ்வையாகப்புலப்படுதலின், தாய்மார் சூல்கொண்டிருக்குங் காலங்களில் தீய நினைவேனும், தீயசொல்லேனும், தீயசெயலேனும் தம்மிடமுண்டாவதற்குச் சிறிதும் இடந்தரலாகாது.

இனிக் கருக்கொண்டிருக்கும்போது நல்நினைவும், நற்சொல்லும், நற்செயலும் உண்டாவதற்குச் சிறுபொழுது முதற்கொண்டே அந்நல் வழிகளிற பழகும் பழக்கம் இன்றிமையாததாயிருத்தலின், பெண்மக்கள் ஒவ்வொருவரும் தம் இளங்கைதக் காலந்தொட்டே தக்கவர்களை அணுகிச் சிறந்த நூல்களைக் கற்றறிந்து தம் அறிவை வளர்த்துக்கொள்வதோடு பயன்படாத சொல்லும், பயனபடாத செயலும் தம்மிடத்தில் உண்டா

காதபடி நிரம்பவுங் கருத்தாய் நடந்துகொள்ளுதலும் வேண்டும். பெண் மக்களுக்குள்ளே வீணனவர்களுடன் பழகும் நேசத்தால் அவர்களுக்குள்ள வீண் தன்மைகள் எல்லாம் தமக்கும் படியுமாதலால் அவர்களுடன் சலந்து பழகாதபடி தம்மைப் பாதுகாத்துக்கொள்வது உயர்ந்த நிலைமையினையும் உயர்ந்த புதல்வர்களையும் பெற விரும்பும் பெண்மக்களுக்கு இன்றியமையாத கடமையாம். சிறுபோது முதற் பழகும் பழக்கம் நல்லதாயிருந்தால், அப்பழக்கத்திற் கேற்றபடி மங்கையர் தாம் கருக் கொண்டிருக்குங் காலங்களில் நல நினைவும், நற்சொல்லும் நற்செயலும் உடையவராவர்; சிறுபோதிற் பழகிய பழக்கம் தீயதாயிருந்தால் அதற்கிசையவே அவர் கருக்கொண்டிருக்குங்காலங்களிலும் தீயநினைவுதீய சொல்லும் செயலும் உடையவராவர். சிறுபொழுதில் உண்டான பழக்கத்தைப் பிறகு இடையிலே மாற்றிக்கொள்வது எளிதிலே முடிவதன்று இதைப்பற்றி முதலிலேயுஞ் சிறிது கூறியிருக்கின்றேன். முன் நிறைந்துள்ள உடை .கருவேல் முதலான மரங்களை அவை சிறு செடிகளாய் இருக்கும்போதே களைந்தெரிவது எளிதிலே முடியும், அங்ஙனம் அப்போது களையப்படாமல் விடப்பட்டால் அவை பருத்து வளர்ந்து பின்னர் எளிதிலே அகற்றப்படாதனவாயிருந்து துன்பத்தை தரும் அல்லவா? இது போலவே, சிறுபோதில் தீயபழக்கம் ஏறிவிட்டால் கருக்கொண்டிருக்குங் காலத்தில் அதனை எவ்வளவோ தான் நீக்க முயன்றாலும் அது நீங்காதாய் வந்து தாயையும் பிள்ளையையும் ஒருங்கே கெடுத்துவிடுமென்று திண்ணமாய் உணரவேண்டும். இனி ஒரு தோட்டத்திற் சிறு செடிகளாய் வைத்து பயிராக்கிய தென்னை, மா, பலா, தாழை முதலியன காலஞ்செல்லச் செல்ல மிகப்பெரியனவாய வளர்ந்து மிகவும் தித்திக்கும் பழங்களைத் தந்து உண்பார்க்கு உடம்பையும் வளர்த்து இன்பத்தையும் விளைத்தல் போலச்சிறு பொழுதிலேதாய்மார்க்குண்டான நல்பழக்கமானது அவர் கருக்கொண்டிருக்கும் காலத்தும் அவரைத்தூயராய் வைத்து, அவர் ஈனும் மக்களையும் பெறுதற்கரிய அழியாச்செல்வங்களாக்கிப் பேரின்பத்தை விளைவிக்குமென்பதனை நாம் சொல்லுதலும் வேண்டுமோ! இவ்வுண்மையை நம்மிற் பெரும்பாலார் உணராமையினாலன்றோ தாம் கருக்கொண்டிருக்கும் போது பிழைபட நடந்துஅசனல் தீயபிள்ளைகளைப் பெற்றுத் தம் வாழ்நாள் முழுவதும் தாமும் துன்பத்தையடைந்து, பிறரையும் துன்பத்திற்கு உள்ளாக்குகின்றார்கள். ஆ! நம் பெண்மக்களின் பேதைமைச் செயல் நினைக்குந்தோறும் நம் உள்ளத்தை நீராக உருக்குகின்றதே! நம் பெண்மக்களைப் பாதுகாத்துவரும் ஆண்மக்களாயினும் இவைகளையெல்லாம் எண்ணிப்பார்த்து அவைகளைச் சீர்திருத்துகின்றார்களா வென்றால் பெரும்பாலும் ஆண்மக்களும உயர்ந்த கல்வியறிவு இல்லாதவர்களாயிருத்தலால், அவர்களும் அது செய்யமாட்டாதவர்களாகவே இருக்கின்றனர். இங்ஙனம் ஆண்பாலார் பெண்பாலார் இருவரும் அறியாமை என்னும் இருளில் குடியிருப்பவர்களானால் நாமும் நம்மக்களும் முன்னேறுவதெப்படி? சொல்லுங்கள்,

தொடரும்

உபவாசம் ஆரோக்கியத்திற்கு நலந்தருவது.

(முன் 92-ம் பக்கம் தொடர்ச்சி)

நமது இந்தியா தேசத்தில் உபவாசமானது பல சமயிகளான இந்துக்கள், மகம்மதியர், கிறிஸ்தவர் முதலானவர்களுக்குள் மார்க்கசம்பந்தமான ஓர் கடமையாக எண்ணப்பட்டு வருகிறது. இதில் மகம்மதியர்கள் மாத்திரம் ஒருவாறு அங்ஙனம் மார்க்க சம்பந்தமான கடமையாக அனுஷ்டித்து வருகிறார்கள். இவர்கள் விரதத்தினத்தன்று ஒரு சொட்டு எச்சில் கூட விழுங்குவதில்லை, ஆனால் அவ்விரத தினத்திற்கு முந்தின நாளிரவு நடுச்சாமத்தில் வழக்கமான ஆகாரத்தைவிட அதிகமாகவே சாப்பிடுகின்றனர், அதனால் விரதநாளானது தோற்றத்திற்கு விரதநாள்போலவும் உண்மையில் விருந்துநாளாகவும் ஆய்விடுகிறது. கிறிஸ்தவர்கள் தாங்களும் விரதத்தை ஒழுங்காய் அனுஷ்டிப்பதாய் சொல்லிக்கொள்ளுகிறார்கள், சிலதினங்களில அவர்கள் அனுஷ்டிப்பது வாஸ்தவம், ஆனால் காரியம் ஒன்றுபோலத்தான். கிறிஸ்தவ வேதாகமத்தில் சொல்லியிருக்கிறதென்னவென்றால் விரதத்தினத்தன்று எல்லாரும் சந்தோஷகரமான முகத்தோற்றத்தோடு விளங்க வேண்டுமென்பதே. ஆனால் அனேகர் பசியென்பது வந்தவுடனே அதை வெல்லுவதற்கு சக்தியில்லாமல் வேதாகமச் சட்டத்தை மறந்து பசியின் வசப்பட்டு வேண்டுமட்டும் புசித்து விடுகிறார்கள். விரதமும் பறந்து விடுகிறது. கடைசியாக இந்துக்களுடைய விரதானுஷ்டானத்தை அவர்களுடைய முற்பிதாக்கள் ஏற்படுத்தி வைத்திருப்பதானது மிகவும் கடுமையானதாயிருப்பதோடுகூட தற்சமயம் வெகு அஜாக்கிரதையுடன் அசட்டை செய்யப்பட்டு வருகிறது. ஏகாதசி விரதமென்றும் பிரதோஷ விரதமென்றும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது இது நல்லதுதான் ஆனால் இந்துக்களில் எத்தனை பேர் இவைகளை மார்க்க சம்மந்தமான கடமைகளாக அனுஷ்டித்து வருகிறார்கள்? அவர்கள் அன்றைய தினத்தில்தான் எளிதில் ஜீரணமாகாத விதமாய் எண்ணெய், நெய் சேர்த்த சட்னி, சர்க்கரையுடன் தோசையையும் வடை அடைகளையும் மனதிருப்தியாய் சாப்பிட்டுவிட்டு தங்களுக்கு விரதம் என்றும் சொல்லிக்கொள்ளுவார்கள். இந்துக்களில் சிலர் உண்மையாகத்தான் விரத தினத்தை ஒழுங்காய் சரிவர வேதாகமவிதிப்படி அனுஷ்டித்து வரலாம். நான் அவர்களைப்பற்றி இங்கு பேசவில்லை. எனினும் பெரும்பாலார் நான் முன் சொன்ன வகுப்பையே சேர்ந்தவர்களாகின்றனர். இந்துக்களிடத்தில் இன்னொரு விஷயமும் உண்டு. சொல்லத்தவறிவிட்டேன் அதாவது சிலர் விரதம் விரதம் என்று சொல்லி சதா காலமும் பட்டினியாயிருந்து தங்கள் சரீரத்தை கெடுத்துக் கொள்ளுகிறார்கள்,

ஆக இவ்விரண்டு பழக்கங்களுமே நல்லதல்ல. ஒருவருடைய ஆகாரத்தின் நேரத்தையும், அளவையும் வரையறுத்துச் சொல்ல முடியாது, அவரவருடைய சௌகரியத்திற்கே விட்டுவிட வேண்டியது ஆனால்

பொதுவாக நம் பெரியோரால் ஏற்படுத்தப்பட்ட பிரகாரம் பதினைந்து நாட்களுக் கொருதரம் விரதம் இருக்கவேண்டும். அல்லது தினம் ஒருவேளை ஆகாரத்தை—அனேகமாய் காலை ஆகாரத்தை—ஒழித்துவிடுவது நல்லது, இவ்விதியானது சுகதேகிகளாயிருக்கப்பட்ட வாலிபருக்கு பொருந்தாததா யிருக்கலாம். ஆனால் மத்திமப்பிராயம் கடந்தவர்களுக்கு ரொம்பவும் நலந்தருவதாகும். இவ்விதிகளிருக் கட்டும். தற்காலம் நமது நமது நாட்டில் நாம் அனுஷ்டித்து வரும் வழக்கம் என்ன வென்று பார்ப்போம். அதாவது மேல் நாட்டாரிடமிருந்து நாம் கடன் வாங்கி பனுபவிக்கிறதான நாலுவேளை, ஐந்துவேளை, சமயத்தில் ஆறுவேளை சாப்பிடும் ஆகார முறையேயாகும்'

இப்பொழுது மேல் நாட்டாரே தங்களுக்கு மிதூணினால் விளையும் தீங்குகளையும் அவற்றிற்கு பரிகார முறைகளையும் கண்டுபிடித்துவிட்டார்கள் இந்தியாவிலுள்ள நாமும், நமக்கு தோன்றாவற்றையிறும்நல்ல சரீர சுகமும் வேண்டுமானால் நமது ஆகாரத்தின் எண்ணத்தைக் குறைத்துவரவேண்டும். கவிப்புலமை வாய்ந்த திருவள்ளுவ நாயனாரால் அருளப்பட்ட

'மிகினுங் குறையினும் நோய் செய்யும்'

என்னும் குறளின் அனந்த உண்மையை மறவாதிருக்கக்கடவோம்.

R. S.

மதிப்புரை

சரீர மர்மசாஸ்திரம என்னும் புஸ்தகம் வரப்பெற்றோம். மானிடராயப்பிறந்த ஒவ்வொருவம் அறியவேண்டிய பலவிஷயங்கள் இப்புஸ்தகத்தில கிடைப்புண்டு. இம்மாதிரி புஸ்தகம் இதுவரை தமிழில் இயற்றப்படவில்லை. உயர்ந்த கடிதத்தில் அனேக அவசியமான சித்திரப்படங்களுடன் அழகாய் அச்சிட்டு புஸ்தகரூபமாய் தயாரசெய்யப்பட்டிருக்கிறது பணமுள்ளவரும் இல்லாதவரும கஷ்டமின்றி வாங்கிவாசிக்குமவண்ணம் சொற்பவிலையிலதான் விற்கப்படுகிறது. கலியாணம் ஆகப்போகிறவர்களுக்கும் கலியாணமஆகி இல்லறவாழ்வில் பிரவேசித்தவர்களுக்கும் வெகு அறிவைப் புகட்டக்கூடியது. மருத்துவ தொழில்படிக்கும் மாணவருக்கும்கூட இப்புஸ்தகம் இன்றியமையாததெனலாம். இப்புஸ்தகத்தில் தோன்றும் ஒவ்வொரு விஷயமும் கவனிக்கத்தக்கதே. இது எம். எஸ் நடேசமுதலியார் அவர்களால் இயற்றப்பட்டு சென்னை 12 அருணாச்சல முதலி தெரு மாணிக்கவிலாச அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது விலை ரூ. 1—0—0

* * * *

இதனடியிற்கண்டப் புஸ்தகங்களை திருப்பாதிரிப்புலியூர் ஸ்ரீவாணி விலாச புக் டிப்போ மானேஜரிடமிருந்து வெகு நன்றியறிதலுடன் வரப்பெற்றோம். மதிப்புரைகள் பின்னால் வெளியிடுவோம்.

1, மதனசிங்கர் I & II.
2. மர்மமுகி.
3. ராஜலக்ஷிமி.
4. சுவர்ணகோணம்.

பலவகை குறிப்புகள்

(பல வர்த்தமான பத்திரிகைகளினின்றும் எடுக்கப்பட்டது)

சங்கீதம் ஆரோக்கியத்திற்கு ஓர் மருந்து.

